சுருக்கம்

பள்ளிக் கல்வி– பள்ளி வளாகங்களில் மாணவர்கள் செல்போன் கொண்டு வருவதை தடை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (இ1) துறை.

அரசாணை (நிலை) எண். 261 நாள்: 15.10.2007.

படிக்கப்பட்டவை:–

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 83950/எம்3/07 நாள் 3.10.2007.

*******

ஆணை:

பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகள் பள்ளிகளில் செல்போன் பயன்படுத்துவதால், மாணவர்களின் கவனம் முழுக்க கல்வி கற்பதிலிருந்து திசை திரும்புவதனால், ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கும் திறனும் வீணடிக்கப்படுகிறது என்றும், விடுப்பு நேரங்களில் பாடங்களில் கவனம் செலுத்தாமல் செல்போன் மூலம் குறுஞ்செய்தி அனுப்புவதிலேயே கவனம் செலுத்தும் மாணவ / மாணவியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. பள்ளிக் கூடங்களில் செல்போன் பயன்படுத்துவதை முழுமையாக தடை செய்வதினால் மாணவர்கள் மிகுந்த பயனடைவதுடன் கல்வியில் நல்ல அக்கறை செலுத்துவார்கள் என்றும் ஆசிரியர்களின் கல்வி கற்பிக்கும் திறமையை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு சிறந்த மாணவர்கள் உருவாக வாய்ப்பு உண்டு என்று கருதுவதால் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மாணவ/ மாணவியர் வயது வரம்பின்றி செல்போன் பயன்படுத்துவதை தடை செய்ய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவ/ மாணவியர்கள் வயது வரம்பின்றி பள்ளி வளாகங்களுக்குள் செல்போன் கொண்டு

(த.பி.பா)

வருவதை தடை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. அரசின் இம்முடிவிற்கேற்ப மாணவ/ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.

நகல்:
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.
16/10/2007